## 50 சதவீத மானிய விலையில் தக்கைப்பூண்டு விதை வினியோகம்

மோகனூர் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் விஜயராகவன் வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியுள்ளதாவது:- மோகனூர் வேளாண்மை விரிவாக்க மையத்தில் தேசிய வேளாண்மை வளர்ச்சி திட்டத்தின் கீழ் தக்கைப் பூண்டு விதைகள் 50 சதவீத மானிய விலையில் விற்பனை செய்யப்படுகிறது. தக்கைப் பூண்டு விதையை 1 ஏக்கருக்கு 20 கிலோ வாங்கி விதைப்பு செய்து 45-வது நாள் பூ பூக்கும் தருணத்தில் மடக்கி உழவு செய்வதன் மூலம் அடுத்த பருவத்தில் பயிர் செய்யும் பயிருக்கு மண்ணில் தழைச்சத்து அதிகப்படுத்தி உரச்செலவை குறைக்க தக்கைப்பூண்டு விதையை பயன்படுத்தவும். விதை தேவைப்படும் விவசாயிகள் தங்கள் பகுதி உதவி வேளாண்மை அலுவலர்களை அணுகி மானிய விண்ணப்பம் பெற்றுவாங்கி பயனடையுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் சங்கத்தில் ரூ.61 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனை

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கத்தில் ரூ.61 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

<u>கொப்பரை தேங்காய்</u>

பெருந்துறை வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கத்தில் கொப்பரை தேங்காய் ஏலம் நடைபெற்றது. இந்த ஏலத்துக்கு பெருந்துறை மற்றும் சுற்றுப்புறப்பகுதியில் இருந்து விவசாயிகள் 2 ஆயிரத்து 770 மூட்டைகளில் ஒரு லட்சத்து 35 ஆயிரம் கிலோ கொப்பரை தேங்காய்களை கொண்டு வந்திருந்தனர். இதில் முதல் தரம் கொப்பரை தேங்காய் 46 ரூபாய் 25 காசு முதல் 48 ரூபாய் 30 காசு வரை ஏலம் போனது. 2–ம் தரம் கொப்பரை தேங்காய் ஒரு கிலோ 31 ரூபாய் 5 காசு முதல் 45 ரூபாய் 15 காசு வரை ஏலம் போனது. இந்த விலை கடந்த வாரத்தை விட கிலோ ஒன்றுக்கு ஒரு ரூபாய் கூடுதலாகும். மொத்தம் ரூ.61 லட்சத்துக்கு கொப்பரை தேங்காய் விற்பனையானது.

<u>தேங்காய்</u>

இதேபோல் பெருந்துறை வாரச்சந்தையில் தேங்காய் விற்பனை நடைபெற்றது. மொத்தம் 2 லட்சம் தேங்காய்கள் கொண்டுவரப்பட்டு இருந்தன. இதில் முதல் தரம் தேங்காய் 6 ரூபாய் முதல் 7 ரூபாய்

வரையும், 2–ம் தரம் தேங்காய் 5 ரூபாய் முதல் 6 ரூபாய் வரையும், 3–ம் தரம் தேங்காய் 4 ரூபாய் முதல் 5 ரூபாய் வரையும் விற்றது. இந்த விலை கடந்த வாரத்தை விட ஒரு ரூபாய் குறைவாகும். மொத்தம் ரூ.12 லட்சத்துக்கு தேங்காய் விற்பனையானது.

**வறண்டு கிடந்த அமராவதி ஆற்றில் தண்ணீர் வந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி**

நீண்ட நாட்களாக வறண்டு கிடந்த அமராவதி ஆற்றில் தண்ணீர் வந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

<u>அமராவதி ஆறு</u>

திருப்பூர் மாவட்டம் உடுமலைபேட்டை அருகே உள்ள அமராவதி அணையில் இருந்து உற்பத்தியாகும் அமராவதி ஆறு கரூரில் காவிரி ஆற்றுடன் சேருகிறது. அமராவதி ஆற்றை நம்பி திருப்பூர், ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்களில் லட்சக்கணக்கான ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெற்றுள்ளன. கடந்த ஆண்டு கடும் வறட்சியினால் அமராவதி ஆறு வறண்டு பாலவனம் போல் காட்சி அளித்தது. அமராவதி ஆற்றில் அமைக்கப்பட்டு இருந்த குடிநீர் கிணறுகளும் வறண்டு தண்ணீர் இன்றி பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர்.

இந்த நிலையில் தென்மேற்கு பருவமழை கேரளா பகுதியில் தீவிரம் அடைந்து உள்ளது. இதை தொடர்ந்து அமராவதி அணைக்கு நீர் வரத்து அதிகரிக்க தொடங்கியது. அதே நேரம் பொதுமக்களின் குடிநீர் தேவையை கருத்தில் கொண்டு கடந்த சில நாட்களுக்கு முன் தண்ணீர் திறந்து விடப்பட்டது. அதன்பிறகு தண்ணீர் இல்லாததால் தண்ணீர் திறந்து விடுவது நிறுத்தப்பட்டது. இதனால் தண்ணீர் இன்றி அமராவதி ஆறு ஆங்காங்கே மணல் திட்டுகளால் காட்சி அளித்தது. குடிநீர் கிணற்றில் தண்ணீர் இல்லாததால் பொதுமக்கள் மிகவும் அவதிப்பட்டு வந்தனர்.

<u>ஆற்றில் தண்ணீர் வந்தது</u>

இந்த நிலையில் அமராவதி அணையில் இருந்து ஆற்றுக்கு நேற்று முன்தினம் தண்ணீர் திறந்து விடப்பட்டுள்ளது.அந்த தண்ணீர் வறண்டு கிடந்த அமராவதி ஆற்றில் கரைபுரண்டு ஓடுகிறது. தாராபுரம் அமராவதி ஆற்றிலும் இருகரையை தொட்டப்படி தண்ணீர் செல்வதை பார்த்த விவசாயிகளும் பொதுமக்களும் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.இதன் மூலம் ஆற்றை சுற்றி உள்ள விளைநிலங்களில் நெல்நாற்று விடும் பணி தொடங்கி விட்டது

<u>சாமி தரிசனம்</u>

ஏற்கனவே கிணறுகளை நம்பி சாகுபடி செய்துள்ள விவசாயிகள் தற்போது திறந்து விடப்பட்டுள்ள தண்ணீரால் நிலத்தடி நீர்மட்டம் உயரும் என்றும், வெள்ளாமை இனி கருகாது என்றும் நிம்மதி பெரு மூச்சு விட்டனர்.

இதற்கிடையில் நேற்றுமுன்தினம் ஆடி முதல் சனிக்கிழமை மற்றும் பிரதோஷம் என்பதால் ஆயிரக்கணக்கான பக்தர்கள் அகஸ்தீஸ்வரர் கோவிலுக்கு சென்று சிவபெருமானை வழிபட்டனர். நேற்றும் ஆயிரக்கணக்கான பெண்கள் மற்றும் பொதுமக்கள் அமராவதி ஆற்றில் இறங்கி குளித்து விட்டு சாமிதரிசனம் செய்தனர். சிலர் தங்களது முன்னோருக்கு திதி கொடுத்தனர்.

<u>தண்ணீர் திருட்டை தடுக்க கோரிக்கை</u>

இந்த நிலையில் அமராவதி ஆற்றின் கரையோரங்களில் இலவச மின்சாரத்தை பயன்படுத்தியும், பம்பு செட்டுகளை பொருத்தியும் நூற்றுக்கணக்கான மோட்டார்கள் மூலம் தினசரி பல லட்சம் லிட்டர் தண்ணீர் திருடப்படுகிறது. இதற்காக ஆழ்துளை கிணறுகளிலும், திறந்த வெளி கிணறுகளிலும் 25 எச்.பி. மோட்டாரை 24 மணிநேரமும் இயக்குகிறார்கள். இப்படி திருடப்படும் தண்ணீர் விவசாயத்திற்கு மட்டுமல்லாது லாரிகள் மூலமும், விற்பனை செய்யப்பட்டு வருவதாக புகார்கள் கூறப்படுகிறது. எனவே தண்ணீர் திருட்டை தடுக்க வேண்டும் என்றும் அப்பகுதி பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சிறுதானியங்களில் இருந்து உணவு பொருள் தயாரிப்பு பயிற்சி 1–ந் தேதி நடக்கிறது**

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தில் சிறுதானியங்களில் இருந்து உணவு பொருள் தயாரிப்பு பயிற்சி வருகிற 1–ந் தேதி நடைபெற உள்ளது.

<u>தயாரிப்பு பயிற்சி</u>

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலைய தலைவர் சோழன் ஒரு அறிக்கை வெளி யிட்டுள்ளார். அந்த அறிக்கை யில் அவர் கூறி இருப்பதா வது:–

சிறுதானியங்களின் முக்கியத்துவம், தானியங்களில் உள்ள சத்து விவரம், அதில் இருந்து மதிப்பூட்டப்பட்ட உணவுப் பொருள் தயாரிப்பு பற்றிய செயல் விளக்க பயிற்சி திருவாரூர் மாவட்டம் நீடாமங்கலத்தில் உள்ள வேளாண்மை அறிவியல் நிலையத்தில் நடைபெற உள்ளது. 1–ந் தேதி பயிற்சி வகுப்புகள் நடைபெற உள்ளன.

<u>பெயர் பதிவு</u>

திருவாரூர் மாவட்ட விவ சாயிகள், சுயஉதவிக்குழு உறுப்பினர் மற்றும் அரசு சாரா நிறுவன உறுப்பினர்கள், அரசு சாரா நிறுவன உறுப் பினர்கள் பயிற்சியில் கலந்து கொள்ளலாம். பயிற்சியில் சேர விருப்பம் உள்ளவர்கள் நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தை

04367–260666, 261444 ஆகிய எண்களில் தொடர்பு கொண்டு பெயர்களை முன்பதிவு செய்து கொள்ள வேண்டும். இவ்வாறு அந்த அறிக்கை யில் கூறப்பட்டுள்ளது.

**குடியாத்தம் தாலுகாவில், தோல் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு ரூ.16¾ லட்சம் நிவாரண உதவித்தொகை வேலூர் உதவி கலெக்டர் வழங்கினார்**

குடியாத்தம் தாலுகாவில் தோல் கழிவுநீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு தமிழக அரசின் நிவாரண உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. மேல்பட்டி, பேரணாம்பட்டு, வளத்தூர், குடியாத்தம் மேற்கு ஆகிய உள்வட்டங்களை சேர்ந்த 239 விவசாயிகளுக்கு வேலூர் உதவி கலெக்டர் என்.சண்முகசுந்தரம் ரூ.16 லட்சத்து 80 ஆயிரத்து 878–க்கான காசோலைகளை வழங்கினார்.

நிகழ்ச்சியில் தாசில்தார் கஜேந்திரன், துணை தாசில்தார் பிரபாவதி, வருவாய் ஆய்வாளர்கள் அன்பழகன், சித்ராதேவி, கிராம நிர்வாக அலுவலர் ஜீவரத்தினம் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

தினமலர்
நிறுவனர்: டி.வி.ராமசுப்பையர்

**ஆத்தூர் தோட்டக்கலை பண்ணை ரூ.10 லட்சத்தில் மேம்படுத்த திட்டம்**

செங்கல்பட்டு:ஆத்தூர் அரசு தோட்டக்கலை பண்ணையை மேம்படுத்த, 10 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு
செய்யப்பட்டுள்ளது.

செங்கல்பட்டு அடுத்த ஆத்தூரில், அரசு தோட்டக்கலைத் துறை பண்ணை, 30.65 ஏக்கர் பரப்பளவில் இயங்கி வருகிறது. பண்ணையை பராமரிப்பதற்கு தேவையான ஊழியர்கள் இருந்தும், தண்ணீர் வசதி இல்லாததால், போதிய உற்பத்தி செய்ய முடியவில்லை. இதற்கான நீராதார கிணறு, 1 கி.மீ., தொலைவில், பாலாற்றில் உள்ளது.

அங்கிருந்து, குழாய்கள் மூலம் பண்ணைக்கு நீர் கொண்டு வரப்படுகிறது. இது, தற்போது வறண்டு காணப்படுகிறது. பண்ணை வளாகத்தில் அமைந்துள்ள கிணறும் தண்ணீர் இன்றி வற்றியுள்ளது. இதனால், அங்கு வளர்க்கப்படும் செடிகள் நீரின்றி கருகியது.

இதுகுறித்து, கடந்த மாதம், "தினமலர்' நாளிதழில் செய்தி வெளியிடப்பட்டது. அதை தொடர்ந்து, பண்ணைக்கு, தண்ணீர் வசதிக்காக, 5.50 லட்சம் ரூபாயும், சுற்றுச் சுவரை பழுது பார்க்க 3.70 லட்சம் ரூபாயும், பண்ணையை பராமரிக்க 1.30 லட்சம்
ரூபாயும் என, மொத்தம் 10.50 லட்சம் ரூபாய் நிதியை, அரசு ஒதுக்கி உள்ளது. இப்பணியை, வேளாண்மை தொழில்நுட்பத் துறையினர் விரைவில் மேற்கொள்ள உள்ளனர்.

**குறுவை சாகுபடிக்கு முன் மாற்று பயிர் கொத்தவரங்காய் பயிரிட விவசாயிகள் ஆர்வம்**

பொன்னேரி:குறுவை சாகுபடிக்கு முன், மாற்று பயிரான கொத்தவரங்காய் பயிரிடுவதில் விவசாயிகளிடையே ஆர்வம் ஏற்பட்டு வருகிறது.

மீஞ்சூர் ஒன்றியத்தில், சம்பா, குறுவை என, ஆண்டுக்கு இருமுறை நெல் பயிரிடுவதில் விவசாயிகள் அதிகம் ஈடுபடுகின்றனர். அதே சமயம், குறுகிய காலங்களில் அதிக லாபம் தரும் மாற்று பயிர்கள் பயிரிடுவதில் ஒரு சிலர் ஈடுபடுகின்றனர்.

தற்போது, மீஞ்சூர் ஒன்றியத்தில் உள்ள, சோமஞ்சேரி கிராமத்தில், விவசாயி ஒருவர் கொத்தவரங்காய் பயிரிட்டு உள்ளார்.

இது, சைவ உணவு பிரியர்களிடையே, மிகுந்த வரவேற்பு மிக்க காய் ஆகும். கொத்தவரங்காய்

வற்றல், ஊறுகாய், கூட்டு, பொறியல் என, பலவகை ருசியான உணவு தயாரிப்பிற்கு பயன்படுகிறது.

குறைந்த மூலதனம் மற்றும் நீர் ஆதாரம் இருந்தால், கொத்தரவங்காய் விவசாயத்தில் ஈடுபடலாம். களிமண் பரப்பில், 15 நாட்களுக்கு ஒரு முறையும் மணல் பரப்பில், ஏழு நாட்களுக்கு ஒரு முறையும் தண்ணீர் பாய்ச்சினால் போதுமானது. ஒரு முறை பூச்சி மருந்து தெளித்தால் போதுமானது.

விதை, பதியம், களை, மருந்து உள்ளிட்ட செலவுகள் ஏக்கருக்கு, 5,000 ரூபாய் வரை ஆகும். இதன் பயிர் காலம், 90 நாட்கள் ஆகும். 1 ஏக்கருக்கு, 2 முதல், 3 டன் வரை மகசூல் பெறலாம்.

இதன் மூலம், ஏக்கருக்கு, 30 ஆயிரம் முதல், 40 ஆயிரம் வரை லாபம் ஈட்டலாம்.

இதுகுறித்து, விவசாயி பிரபு கூறுகையில், ""கொத்தரவங்காய் காய்க்கத் துவங்கியவுடன், தினமும் பறித்து விடுவோம். மொத்த விற்பனையாளர்கள் இங்கேயே வந்து வாங்கிச் செல்கின்றனர்.

1 கிலோ, 15 ரூபாய் முதல், 20 ரூபாய் வரை, விலை போகிறது. இதில், உழைப்பு சற்று அதிகம். அதே சமயம் வருமானமும் உண்டு,'' என்றார்.

குறைந்த நீர் ஆதாரம், குறைந்த முதலீடு, அதிக லாபம் உள்ள கொத்தவரங்காய் பயிரிடுவதில், தற்போது விவசாயிகளிடையே ஆர்வம் அதிகரித்து வருகிறது. நெல் அறுவடை முடிந்து, நிலத்தை தரிசாக போடுவதைக் காட்டிலும், இதுபோன்ற மாற்று விவசாயத்தில் ஈடுபட, மற்ற விவசாயிகளும் ஆர்வம் காட்ட வேண்டும்.

**"நெல் சாகுபடிக்கு தேவையான உரம் கையிருப்புள்ளது'**

திருவள்ளூர்:நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தற்போது, கையிருப்பில் உள்ளன. விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரங்களை வாங்கி பயன்படுத்தலாம் என, ஆட்சியர் அறிவித்துள்ளார்.

வரி விலக்கு

தமிழக அரசு, உரங்

களின் மீதான, 4 சதவீத மதிப்பு கூட்டப்பட்ட வரியிலிருந்து விலக்களித்து உள்ளது. இதன் மூலம், 50 கிலோ மூட்டை ஒன்றுக்கு, 11 ரூபாய் முதல் 52 ரூபாய் வரை, உரங்களின் விலை குறைந்துள்ளது.

தற்போது, யூரியா

உரங்கள் மட்டும், மிகக் குறைந்த விலையில் கிடைக்கின்றன. எனவே, விவசாயிகள் அதிகளவில் யூரியா உரத்தை வாங்கி பயன்படுத்தி வருகின்றனர்.

யூரியா போன்ற தழைச்சத்தை அளிக்கக் கூடிய உரங்களை, பரிந்துரைக்கப்பட்ட அளவை விட

அதிகளவில் பயன்
படுத்தினால், பயிர்களின் வளர்ச்சி அதிகரித்து, பூச்சி நோய் தாக்குதலுக்கு உள்ளாக நேரிடும்.
இதன் மூலம், மகசூல் குறைய வாய்ப்புள்ளது.
விவசாயிகள் மண்வள பரிசோதனையின் அடிப்
படையில் அல்லது பொது பரிந்துரையின் பேரில், உரங்களை இட விவசாயிகள் கேட்டுக் கொள்ளப்
படுகின்றனர்.
எனவே, விவசாயிகள் யூரியா உரங்களை பரிந்துரைக்கப்பட்ட அளவை மட்டும் இட்டு பலனடைய கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.
பயன் பெறலாம்
நெல் சாகுபடிக்கு தேவையான உரங்கள் தற்போது போதிய அளவு கையிருப்பில் உள்ளது.
எனவே, விவசாயிகள் தங்களுக்கு தேவையான உரங்களை வாங்கி பயன் பெறுமாறு, ஆட்சியர் வீரராகவ ராவ் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்
தெரிவித்துள்ளார்.

**முதல் போக நெல் சாகுபடி பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்டம், பாரூர் பெரிய ஏரியில் இருந்து முதல் போக நெல் சாகுபடிக்கு நேற்று(ஜூலை21) தண்ணீர் திறந்துவிடப்பட்டது.கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி அடுத்துள்ளது பாரூர் பெரிய ஏரி. இந்த ஏரிக்கு தென்பெண்ணை ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள கே.ஆர்.பி., அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டு நெடுங்கல் தடுப்பணையில் இருந்து கால்வாய் மூலம் தண்ணீர் செல்கிறது.இந்த ஏரியில் தேக்கி வைக்கப்படும் தண்ணீர் ஏரியின் கிழக்கு மற்றும் மேற்கு புற கால்வாயில் திறந்துவிடப்படுகிறது. இதனால், பாரூர், அரசம்பட்டி, பெண்டரஅள்ளி, கீழ்குப்பம், புலியூர், கோட்டப்பட்டி, ஜிங்கல் கதிரம்பட்டி, தாதம்பட்டி, விருப்பம் பட்டி ஆகிய கிராமங்கள் மற்றும் இதனை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள ,4 ஆயிரத்து, 729 ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது.கர்நாடகா மாநிலத்தில் பெய்து வந்த தொடர் மழையால் கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்தால் கடந்த, 15 நாட்களுக்கு முன்பு அணையில் இருந்து பாரூர் ஏரி பாசனத்துக்காக, ஏழு நாட்கள் தென்பெண்ணை ஆற்றில் தண்ணீர் திறந்துவிடப்பட்டது.இதனால் பாரூர் பெரிய ஏரி நிரம்பியுள்ளதால், இங்கிருந்து, முதல் போக நெல் சாகுபடிக்கு உடனடியாக தண்ணீர் திறந்துவிடவேண்டும் என்று ஏரி பாசன பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்தனர்.இதனையடுத்து தமிழக அரசின் உத்தரவுபடி ஏரியில் இருந்து நேற்று, (ஜூலை21) கிழக்கு மற்றும் மேற்கு புற கால்வாயில் முதல் போக நெல் சாகுபடிக்கு தண்ணீர்

திறந்துவிடப்பட்டது.கிழக்கு பிராதான கால்வாயில் வினாடிக்கு, 50 கன அடி வீதமும், மேற்கு பிரதான கால்வாயில் வினாடிக்கு, 20 கன அடி வீதமும், இரு கால்வாய்களிலும் சேர்த்து மொத்தம், 70 கன அடிநீர், 150 நாட்களுக்கு முறைபாசனம் வைத்து, மூன்று நாட்கள் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விட்டும், நான்கு நாட்கள் மதகை மூடி வைத்தும் தண்ணீர் திறந்து விடப்படும்.டி.ஆர்.ஓ., பிரகாசம், எம்.எல்.ஏ.,க்கள் கிருஷ்ணமூர்த்தி, மனோரஞ்சிதம் நாகராஜ் ஆகியோர் ஏரியில் இருந்து தண்ணீரை பாசனத்திற்கு திறந்து வைத்தனர். நிகழ்ச்சியில், மாவட்ட பஞ்சாயத்து சேர்மன் அசோக்குமார், ஆர்.டி.ஓ., மனோகரன், பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் ஜெகநாதன், உதவி செயற்பொறியாளர் குமார், உதவி பொறியாளர் ரத்தினவேல், மாவட்ட கவுன்சிலர் ரவிச்சந்திரன், மாவட்ட பால் வளத்துணை தலைவர் தென்னரசு, யூனியன் சேர்மேன் ஜமுனா கிருஷ்ணன், தாசில்தார் நடராஜன்., துணை தாசில்தார் பாலு மற்றும் ஏரி பாசன சங்க தலைவர்கள், நிர்வாகிகள் மற்றும் விவசாயிகள் பலர் கலந்து கொண்டனர்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர் கூட்டம் வரும், 26ம் தேதி கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது.கலெக்டர் ராஜேஷ் வெளியிட்ட அறிக்கை:கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வரும், 26ம் தேதி காலை, 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்டரங்கில் நடக்கிறது. கூட்டத்துக்கு கலெக்டர் ராஜேஷ் தலைமை வகிக்கிறார். கூட்டத்தில் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு தங்களது குறைகளை தெரிவித்து, நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

**திருந்திய நெல் சாகுபடிமாணவிகளுக்கு பயிற்சி**

கோபிசெட்டிபாளையம்: டி.என்.பாளையம் வட்டாரத்தில், வேளாண் கல்லூரி மாணவிகளுக்கு திருந்திய நெல் சாகுபடி குறித்த பயிற்சி அளிக்கப்பட்டது.
ஈரோடு மாவட்டத்தில் கோபி, டி.என்.பாளையம், நம்பியூர், அந்தியூர், பவானி, அம்மாபேட்டை ஆகிய வட்டாரங்களில், கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலை மாணவியர் பல்வேறு குழுக்களாக வந்து, கிராமங்களில் களப்பணி பயிற்சி பெறுகின்றனர்.பயிர் சாகுபடி முறை, விவசாயிகளின் சமூக பொருளாதார நிலை, மண் வளம் உள்பட பல்வேறு புள்ளி விவரங்களை சேகரித்து வருகின்றனர். வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் அலுவலக நிர்வாகம் குறித்து, 15 நாட்களும், கிராம தங்கல் திட்டத்தில், 30 நாட்களும், தொண்டு நிறுவனங்களின் செயல்பாடுகள் குறித்து, 15 நாட்கள், வேளாண்மை சார்ந்த தொழிற்சாலைகளில், 17 நாட்கள் என

மொத்தம் இரண்டரை மாதங்கள் பயிற்சி பெறுகின்றனர்.டி.என்.பாளையம் வட்டாரத்தில் மாணவியர் அமுதவள்ளி, பிரித்திவா, ராஜராஜேஸ்வரி, ரேவதி, சரண்யா, சாஹிராசெரின், சண்முகபிரியா ஆகியோர் பயிற்சி பெறுகின்றனர். திருந்திய நெல் சாகுபடி செய்வதன் அவசியம் குறித்தும், அதனால் கிடைக்கும் நன்மைகள், மகசூல் அதிகரிப்பு, மேட்டுபாத்தி நாற்றங்கால் அமைப்பது குறித்த முறைகளை, விவசாயிகளிடம் மாணவிகள் கேட்டறிந்தனர். வேளாண்மை உதவி இயக்குனர் (பொறுப்பு) ஆசைத்தம்பி, வேளாண்மை அலுவலர்கள் சரோஜா, முரளி உள்பட பலர் பங்கேற்றனர்.

**சப்போட்டோ பழ உற்பத்தியில் விவசாயிகள் ஆர்வம்**

பந்தலூர் சுற்றுவட்டார பகுதி களில் சப்போட்டா பழ விவசாயம் அதிகரித்து வருகிறது. சமவெளி பகுதிகளில் மட்டும் அதிகளவில் விளைவிக்கப்படும் சப்போட்டா பழ உற்பத்தி, தற்போது பந்தலூர் சுற்றுப்புற பகுதியில் அதிகரித்து வருகிறது. உளுவாடு உட்பட பல்வேறு பகுதிகளில் ஒட்டு முறையில் உற்பத்தி செய்யப்ப டும் மரங்களில், 3 ஆண்டுகளில் பழம் காய்க்க துவங்குகிறது. எனவே, மாவட்ட தோட்டக்கலை துறையினர் ஊக்கம் அளித்தால், பல விவசாயிகள் பயன்பெற வாய்ப்புள்ளது.

**பயிர் கடன் வாங்க குவியும் விண்ணப்பங்கள்**

மஞ்சூர்:மாவட்டம் முழுவதும் கூட்டுறவு வங்கியில் பயிர் கடன் பெற விவசாயிகளிடமிருந்து விண்ணப்பங்கள் குவிகிறது.
நீலகிரி மாவட்டத்தில் 6 தாலுகாக்களில் 74 தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. 70 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். அந்தந்த காலகட்டத்தில் பெறப்படும் பயிர் கடன் மூலம் விவசாயிகள் மலை காய்கறி, தேயிலை விவசாயம் செய்து வருகின்றனர்.

**சம்பா சாகுபடிக்கு மேட்டூர் அணை கைகொடுக்குமா? : காத்திருக்கும் மாவட்ட விவசாயிகள்**

கரூர்: சம்பா சாகுபடிக்கு கரூர் மாவட்ட விவசாயிகள் தயராகும் நிலையில், மேட்டூர் அணையில் தண்ணீர் திறக்கப்படுமா? என்று, மாவட்ட விவசாயிகள் ஆவலோடு காத்திருக்கின்றனர்.மேட்டூர் அணை மூலம் சேலம், நாமக்கல், ஈரோடு, கரூர், திருச்சி, தஞ்சை, திருவாரூர், புதுக்கோட்டை, நாகை, கடலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில், 16.5 லட்சம் ஏக்கர் நிலம் பாசன வசதி பெறுகிறது. கடந்தாண்டு பருவமழை பொய்த்து போனதாலும், கர்நாடகம் காவிரியில் தண்ணீர் திறந்து விடாமல் வஞ்சித்ததால், மேட்டூர் அணையில், 25 அடிக்கு குறைவாக தண்ணீர் இருப்பு

இருந்தது.இதனால் குறுவை, சம்பா சாகுபடி பாதிக்கப்பட்டது. இதேபோல் இந்தாண்டு குறுவை சாகுபடி முற்றிலும் முடங்கி போய் விட்டது. இந்த சூழ்நிலையில், தற்போது கர்நாடகத்தில் காவிரி நீர்பிடிப்பு பகுதிகளில் கனமழை பெய்து வருவதால், அணைகளிருந்து உபரிநீர் திறந்து விடப்படுகிறது. தற்போது, மேட்டூர் அணையின் நீர்மட்டம், கிடுகிடுவென, 75 அடியாக உயர்ந்து வருகிறது.வடக்கு கிழக்கு பருவமழை மற்றும் மேட்டூர் அணை கைகொடுக்கும் என்ற நம்பிக்கையில், டெல்டா விவசாயிகள் சம்பா சாகுபடிக்கு தயாராகி வருகின்றனர்.கரூர் மாவட்டத்தில் காவிரி, அமராவதி ஆற்று பாசன மூலம், 15 ஆயிரத்து, 816 ஹெக்டேர் நிலப்பரப்பில் சாகுபடி நடந்து வருகிறது. இதில் கிருஷ்ணராயபுரம், மாயனூர், லாலாப்பேட்டை, குளித்தலை, தோகைமலை, மணல்வாடி, மகதானபுரம், சித்தலவாடி ஆகிய பகுதிகளில், காவிரி பாசனம் மூலம் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.இதில் குறுவை சாகுபடி, 100 ஹெக்டேர் என்ற குறைந்த அளவில் செய்யப்படுகிறது. இதுகூட, இந்தாண்டு நடக்கவில்லை. ஆனால் சம்பா, 10 ஆயிரத்து, 800 ஹெக்டேர் நிலப்பரப்பில் பயிரிடப்பட்டு வந்தது. கடந்த ஆண்டு நிலத்தடி நீர் பாசனத்தை நம்பி, 7 ஆயிரம் ஹெக்டேர் நிலப்பரப்பில் நெல் சாகுபடி செய்யப்பட்டது. இதில், 12 டன் மட்டுமே நெல் அறுவடை செய்யப்பட்டது.

இதுகுறித்து வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது:மேட்டூர் அணையில் நீர்மட்டம் உயர்ந்து வருவதால், சம்பா சாகுபடிக்கு விவசாயிகள் சுறுசுறுப்பாக தயாராகி வருகின்றனர். ஆகஸ்ட் மாதம் துவங்கி, டிசம்பர் மாதம் வரை, சம்பா சாகுபடி நடப்பது வழக்கம். கரூரில் மாவட்டத்தில் உள்ள, எட்டு வேளாண் விரிவாக்க மையங்களில், 160 டன் விதை நெல் கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது. இதில் விவசாயிகள் பெரும்பாலும் பி.பி.டி., ரகம் நெல்லை பயிரிடுகின்றனர்.இதுமட்டுமல்லாமல் ஒரு கிலோ விலை நெல்லுக்கு, ஐந்து ரூபாய் மானியம் வழங்கப்படுகிறது. இதற்கு உதவி வேளாண் அலுவலர் சான்று பெறுவது அவசியமாகும். கரூர் மாவட்டத்துக்குரிய உர ஒதுக்கீடு போதுமான அளவு கேட்டு பெறப்பட்டு வருகிறது. யூரியா, சூப்பர் பாஸ்பேட் போன்ற உரங்கள் தனியார் மற்றும் தொடக்க வேளாண்மை கூட்டுறவு கடன் சங்கங்களில், போதுமான அளவு கையிருப்பு வைக்கப்பட்டுள்ளது.உரம் வாங்கும் விவசாயிகள், உரிய பில்லையும் கேட்டு பெறவேண்டும். அதிக விலைக்கு உரங்கள் விற்றால், உரக் கட்டுப்பாட்டு சட்டத்தின்படி கடும் நடவடிக்கை எடுக்கப்படும். உர விற்பனை நிலையத்தில் தெளிவான தகவல் பலகை, விலைப்பட்டியல் போன்றவை இருக்க வேண்டும்.தற்போது விவசாயிகள் பசுதாள் உரங்களை ஈட்டு, நிலங்களை தயார் செய்தால், அதிக மகசூல் பெறமுடியும். நடப்பு ஆண்டு மாவட்டத்தில், 8,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் திருந்தி நெல் சாகுபடி தொழில் நுட்பத்தை பயன்படுத்த

திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் கூடுதல் மகசூலை விவசாயிகள் பெறமுடியும்.இவ்வாறு அவர் கூறினார்

**விவசாயிகள் குறைதீர்கூட்டம்: 26ல் நடப்பு**

தஞ்சாவூர்: "மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 26ம் தேதி, கலெக்டர் அலுவலகத்தில் நடக்கிறது இதில், விவசாயிகள் பங்கேற்று கருத்துக்களை கூறலாம்' என, தஞ்சை கலெக்டர் பாஸ்கரன் தெரிவித்துள்ளார்.இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கை:தஞ்சை மாவட்ட கலெக்டர் அலுவலகத்தில், பிரதான கட்டிட கூட்ட அறை முதல் மாடியில், மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கூட்டம் வரும், 26ம் தேதி நடக்கிறது. காலை, 10 மணிக்கு துவங்கும் கூட்டத்தில், புதிய தொழில்நுட்பம் குறித்து விவசாயிகளுக்கு நிபுணர்கள் விளக்கம் அளிக்கின்றனர்.இதில் விவசாயிகள், சங்க பிரதிநிதிகள் பங்கேற்று, நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வேளாண்மை பொறியியல்துறை உள்ளிட்ட, விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்கலாம்.கருத்து கூற விரும்பும் விவசாயிகள் முன்னதாக, தங்கள் பெயர், ஊர் மற்றும் வட்டாரம் குறித்து காலை, 8.30 மணி முதல், 10 மணிக்குள் கம்ப்யூட்டரில் பதிவு செய்ய வேண்டும். ஒவ்வொரு வட்டாரத்துக்கும் பதிவு செய்த முதல், இரண்டு பேர் வீதம் கருத்துக்களை கூற வாய்ப்பு தரப்படும்.

**நெல் வரப்புகளில் பயறு வகை சாகுபடி வேளாண் துறை தீவிரம்**

ராமநாதபுரம்:நெல் வயல்களில் பயறு வகைகளை சாகுபடி செய்து, உற்பத்தியை இரண்டு மடங்காக உயர்த்தும் முயற்சியில் மாவட்ட நிர்வாகம் களமிறங்கியுள்ளது.
மாவட்டத்தில் ஒரு லட்சத்து 30 ஆயிரம் எக்டேரில், நெல் சாகுபடி நடந்து வருகிறது. இதை மட்டுமே நம்பாமல், சில விவசாயிகள் ஊடு பயிராக மிளகாய், பருத்தியை சாகுபடி செய்து வருகின்றனர். தற்போது, நடப்பாண்டு நெல் வயல் வரப்புகளில் உளுந்து, பாசிப்பயறு, தட்டப்பயறு போன்ற தானிய பயறுகளை சாகுபடி செய்வது குறித்து வேளாண் அதிகாரிகள், விவசாயிகளிடம் ஆலோசனை தெரிவித்து வருகின்றனர். இதன், மூலம் மாவட்டத்தில் பயறு வகை பரப்பளவை அதிகப்படுத்தவும் மாவட்ட நிர்வாகம் திட்டமிட்டுள்ளது. வேளாண் அதிகாரி ஒருவர் கூறியதாவது: தற்போது, 3,300 எக்டேரில் உளுந்து, 32 எக்டேரில் பாசி பயிர், 350 எக்டேரில் தட்டைப்பயிர் சாகுபடி நடந்து வருகிறது. இதை இரண்டு மடங்கு அதிகரிக்கும் வகையில் ஆலோசனை வழங்கி வருகிறோம். பரமக்குடி, கமுதி, நயினார்கோவில், போகலூர் ஒன்றியங்களில் இதை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம். பயறுகளை, இலவசமாக வழங்க உள்ளோம், என்றார்.

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக்கூட விவசாயிகளுக்கு 10 நாளில் பணம் பட்டுவாடா

செஞ்சி ஒழுங்கு முறை விற்பனைக் கூட விவசாயிகளுக்கு கொள்முதல் நிலுவைப் பணம் 10 நாட்களில் பட்டுவாடா செய்ய கமிட்டி நிர்வாகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

செஞ்சி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல், மணிலா உள்ளிட்ட பொருள்களுக்கு சுமார் ரூ.3 கோடி பணத்தை வழங்காமல் சில வியாபாரிகள் ஏமாற்றி வந்ததாக புகார் எழுந்தது.

இந்நிலையில் முத்தரப்புக் கூட்டம், கடந்த மாதம் நடைபெற்றது. இதில் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு, ஜூலை 15-ம்தேதிக்குள் பணம் பட்டுவாடா செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது. ஆனால் பணம் பட்டுவாடா செய்யப்படாததால் பாதிக்கப்பட்ட விவசாயிகள் ஒழுங்குமுறை விற்பனைக் கூடக் கதவை இழுத்து பூட்டி போராட்டம் நடத்தினர்.

இதனைத் தொடர்ந்து ஒழுங்கு முறை விற்பனைக் கூட அதிகாரிகள் மற்றும் விவசாயிகள், வியாபாரிகள் உள்ளிட்டோர் செஞ்சி வட்டாட்சியர் அலுவலகத்தில் வியாழக்கிழமை பேச்சு வார்த்தை நடத்தினர்.

பேச்சுவார்த்தைக்கு செஞ்சி வட்டாட்சியர் எஸ்.புண்ணியக்கோட்டி தலைமை வகித்தார். விழுப்புரம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் ஞானவேலு, செஞ்சி டிஎஸ்பி.பன்னீர் செல்வம், செஞசி நகர விவசாய வங்கி தலைவர் வி.ரங்கநாதன், முன்னாள் பேரூராட்சி துணை தலைவர் அரங்க.ஏழுமலை, விவசாயிகள் சங்க மாநில துணை தலைவர் முகம்மதுஅலி, வட்ட செயலர் சி.கோவிந்தசாமி முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில், வியாரிகள் பணத்தை செலுத்த முடியாத சூழலில் உள்ளதாக தெரிவித்தனர்.

இதனால் வியாபாரிகளுக்கும் ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகளுக்கும் கடும் வாக்கு வாதம் ஏற்பட்டது.

விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்ட நெல்லுக்கு உரிய தொகையை செலுத்தாமல் வியாபாரிகள் கமிட்டியில் இருந்து வெளியே எடுத்து சென்றுள்ளனர். இதற்கு ஒழுங்குமுறை விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மற்றும் அதிகாரிகள் உடந்தையாக இருந்துள்ளனர் என விவசாயிகள் குற்றம்சாட்டினர்.

இதனைத் தொடர்ந்து பேசிய, விழுப்புரம் மாவட்ட ஒழுங்குமுறை விற்பனைக் கூட செயலர் ஞானவேலு, பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு 10 நாள்களுக்குள் அரசின் விதிமுறைகளுக்கு உள்பட்டு பணம் பெற்றுதர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இந்த பணத்தை விவசாயியின் நெல்லுக்கு பணம் செலுத்தாமல் வியாபாரியை எடுத்து செல்லுமாறு அனுமதித்த ஒழுங்குமுறை விற்பனைக் கூட அதிகாரிகளிடம் வசூல் செய்யவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இனி வரும் காலங்களில் விவசாயிகளுக்கு பணம் பட்டுவாடா செய்யாமல் ஒரு மூட்டை நெல்லைக் கூட வெளியே எடுத்து செல்ல கமிட்டி நிர்வாகம் அனுமதிக்காது என உறுதி அளித்தார்.

கொள்ளிடம் ஆற்றில் தடுப்பணை: விவசாயிகள் வலியுறுத்தல்
கொள்ளிடம் மற்றும் வெள்ளாற்றில் கடல் நீர் புகாமல் தடுக்க தடுப்பணைகள் அமைக்க வேண்டும் என விவசாயிகள் வலியுறுத்தினர்.

கடலூர் மாவட்ட விவசாயிகள் குறைகேட்பு கூட்டம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இக்கூட்டத்துக்கு மாவட்ட ஆட்சியர் ரா.கிர்லோஷ்குமார் தலைமை வகித்தார்.

மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன் உள்ளிட்ட பல்வேறு துறை அதிகாரிகள் இதில் பங்கேற்றனர்.

விவசாயிகள் கோரிக்கை:

இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து ஏராளமான விவசாயிகள் பங்கேற்று பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

கொள்ளிடம் ஆற்றில் 36 கி.மீ. தூரம் வரை கடல் நீர் புகுந்துள்ளது. இதனால் ஆற்றின் அருகே உள்ள விளை நிலங்களில் உப்புப் படலங்கள் படிந்து, விவசாயம் செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இதுபோல் வெள்ளாற்றிலும் 20 கி.மீ. தூரத்துக்கு கடல் நீர் புகுந்துள்ளது. இதனால் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

எனவே, இந்த ஆறுகளில் கடல் நீர் உட்புகாதவாறு கடல் முகத்துவாரத்தில் இருந்து 10 கி.மீ. தொலைவு வரை தடுப்பணைகளை அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆட்சியர்: இத்திட்டம் பரிசீலனையில் உள்ளது. மேலும் இது அரசின் கவனத்துக்கு கொண்டுச் செல்லப்பட்டு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார் அவர்.

தோட்டக்கலை பயிர்களுக்கு நாற்றங்கால் சட்டம் ஏற்படுத்தக் கோரிக்கை
தரமான கன்றுகள் விவசாயிகளுக்குக் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில், தோட்டக்கலைப் பயிர்களுக்கு நாற்றங்கால் சட்டத்தினை தமிழகத்தில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்ற எதிர்பார்ப்பு விவசாயிகள் மத்தியில் எழுந்துள்ளது.

தமிழகத்தில் 2ஆவது பசுமை புரட்சித் திட்டத்தினை செயல்படுத்தி, விவசாய நிலங்களின் உற்பத்தியைப் பெருக்குவதற்கு தமிழக முதல்வர் ஜெயலலிதா பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்.

அதேபோல, தோட்டக்கலைப் பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்குத் தேவையான தரமான கன்றுகள் கிடைப்பதற்கும், தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற கோரிக்கையை விவசாயிகள் முன் வைக்கின்றனர்.

தமிழகத்தில் சாகுபடி செய்யப்படும் பயறு வகைகள், சிறுதானியங்களுக்கு தரமான விதைகள், சான்றளிப்புத் துறை மூலம் உறுதி செய்யப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

இதற்கான விதை சான்றளிப்புத் துறை இயக்குநர் அலுவலகம் கோவையில் செயல்பட்டு வருகிறது. அதேபோல, இத்துறைக்கான உதவி இயக்குநர் அலுவலகங்கள் அந்தந்த மாவட்டங்களில் உள்ளன.

இதுபோன்ற நிலை தோட்டக்கலைப் பயிர்களுக்கு இல்லை எனக் கூறப்படுகிறது. மேலும் தோட்டக்கலைப் பயிர் கன்றுகளுக்கான நாற்றங்கால் சட்டம் மகாராஷ்டிர மாநிலத்தில் மட்டும் செயல்பட்டு வருவதாகவும் தெரிகிறது.

இந்த வசதி வாய்ப்புகளை, தமிழகத்திலும் செயல்படுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என விவசாயி ஆர். மாரப்பன் தெரிவித்தார்.

மேலும், அவர் கூறியது:

திண்டுக்கல் மாவட்டத்தில் சுமார் 70 ஆயிரம் ஹெக்டேருக்கு மேல் தோட்டக்கலை பயிர் சாகுபடி நடைபெறுகிறது. இதில் மாம்பழம், கொய்யா, வாழை, திராட்சை உள்ளிட்ட கனி வகைகளும், முட்டைக்கோஸ், வெங்காயம், காரட் உள்ளிட்ட காய்கறிகளும், கனகா மரம், மல்லிகை, முல்லை உள்ளிட்ட பூக்களும், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் பரவலாக சாகுபடி செய்யப்பட்டு வருகின்றன.

மாம்பழத்தில் 30-க்கும் மேற்பட்ட ரகங்களும், கொய்யாவில் 15 ரகங்களும், வாழையில் 10-க்கும் மேற்பட்ட ரகங்களும் உள்ளன. ஒரு செடியின் ரகத்தைப் பொறுத்து அதன் சாகுபடி காலம், விளைச்சல், விலை, சுவை உள்ளிட்டவை மாறுபடும்.

விவசாயிகள் கன்றுகளை வாங்கும்போது, அது எந்த வகையைச் சேர்ந்த ரகம் என்பதை அறிய முடியாத நிலை உள்ளது. மேலும் ரகங்கள் குறித்து, எவ்வித நம்பகத்தன்மையும் இல்லாமல் 3 ஆண்டுகளுக்கு, அதன் உற்பத்திக் காலம் தொடங்கும் வரை காத்திருக்கும் சூழ்நிலை உள்ளது.

இதனைத் தவிர்க்க சான்றளிப்புத் துறையை, தமிழகத்திலும் ஏற்படுத்தும் வகையில், நாற்றங்கால் சட்டத்தை அமல்படுத்த வேண்டும். அதன்மூலம், தோட்டக்கலை பயிர் சாகுபடி செய்யும், அனைத்து தமிழக விவசாயிகளும் பயன்பெறுவர் என்றார் அவர்.

தோட்டக் கலைக் கல்லூரி மாணவர்களுக்கு களப்பயிற்சி

தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கி வரும் பெரியகுளம் அரசு தோட்டக் கலைக் கல்லூரி இறுதி ஆண்டு மாணவர்கள், களப்பயிற்சி மற்றும் செயல்பாடுகள் குறித்த பயிற்சியினை, ஒட்டன்சத்திரம் வட்டம் கேதையுறும்பு மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களில் மேற்கொண்டு வருகின்றனர்.

தோட்டக் கலை உதவி இயக்குநர் வ. பழனிச்சாமி, உதவி வேளாண்மை அலுவலர்கள் ஆகியோர், மாணவர்களுக்கு தொழில்நுட்பப் பயிற்சியினை வழங்கினர்.

மேலும், தேசிய தோட்டக் கலை இயக்கத் திட்டம் மூலம், கேதையுறும்பு கிராமத்தில் இயல்பான நடவு முறையில் மா சாகுபடி செய்துள்ள செல்லமுத்து என்பவரது தோட்டத்தில், மா கவாத்து செய்தல் குறித்தும், மா மரத்தைத் தாக்கியுள்ள பூச்சி மற்றும் நோய்களுக்கான பயிர் பாதுகாப்புத் திட்டங்கள் குறித்தும், நுண்ணீர் பாசன அமைப்பு செயல்படும் விதம் குறித்தும், தொழில்நுட்பங்கள் குறித்தும், உதவி வேளாண்மை அலுவலர் முருகேசன் மாணவர்களுக்கு விளக்கம் அளித்தார்.

முருங்கை சாகுபடி கருத்தரங்கு

பெரியகுளம் அருகே உள்ள சில்வார்பட்டியில், குள்ளப்புரம் வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி சார்பில், விவசாயிகளுக்கான முருங்கை சாகுபடி கருத்தரங்கம் நடத்தப்பட்டது.

கல்லூரியின் இணை இயக்குநர் மோகன் தலைமை வகித்தார்.

சில்வார்பட்டி விவசாயிகள் நலச் சங்க செயலர் முத்துக்காமாட்சி முன்னிலை வகித்தார்.

மாணவி உமாமகேஸ்வரி வரவேற்றார்.

தோட்டக்கலை உதவி அலுவலர்கள் கோவிந்தராஜ், வேளாண்மை உதவி அலுவலர்கள் ராமன், ரேணுகாதேவி, மண்வளத் துறை உதவிப் பேராசிரியர் ராஜகுமாரி மல்லிகா, தனியார் சொட்டுநீர் நிறுவன அலுவலர் மணி, கல்லூரி உதவிப் பேராசிரியர்கள் குஞ்சம்மாள், சுந்தர் உள்பட பலர் கலந்துகொண்டனர்.

இதில், முருங்கை விவசாயிகளுக்கு அரசு வழங்கக்கூடிய சலுகைகள், நவீன சாகுபடி முறை, மண் பரிசோதனை முறை, சொட்டுநீர் பாசனத்தின் நன்மைகள் மற்றும் சொட்டுநீர் பாசனத்தின் அவசியம் ஆகியன குறித்து விளக்கப்பட்டது.

கருத்தரங்கில், இப் பகுதியைச் சேர்ந்த விவசாயிகள் திரளாகக் கலந்துகொண்டு பயனடைந்தனர்.

ஏற்பாடுகளை, இக்கல்லூரியின் நான்காம் ஆண்டு மாணவிகள் உமா மகேஸ்வரி, நித்யா, சுகாசினி, பிரதீபா, முத்துலட்சுமி, மணிமேகலை, ஐஸ்வர்யா ஆகியோர் செய்திருந்தனர். வேளாண்மை தொழில்நுட்பக் கல்லூரி உதவிப் பேராசிரியர் விஜய்பாபு நன்றி கூறினார்.

விதைநேர்த்தி செயல் விளக்கமுகாம்

விருதுநகர் மாவட்டம் பெரிய கட்டங்குடியில், மதுரை வேளாண் கல்லூரி மற்றும் வேளாண்மை துறையும் இணைந்து, விதை நேர்த்தி செயல் விளக்கம் அளித்தனர்.

ஊராட்சித் தலைவர் கண்ணதாசன் தலைமை வகித்தார். துணைத் தலைவர் தங்கவேல், வேளாண் உதவி அலுவலர் ஜெயக்குமார், ஜெயபால், மீனா முன்னிலை வகித்தனர். மதுரை வேளாண் கல்லூரி மாணவிகள் திவ்யா, தர்சனாதிலீப், யான்சிங்லுயூக்கம், சிந்துஜா, வினோதினி, பாரதி, சூர்யா ஆகியோர் விதை நேர்த்தி செயல்முறை விளக்கம் அளித்தனர். நெல்லில் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், விதை நேர்த்தி செய்யும் முறையினையும் மாணவிகள் செய்து காட்டினர். தானிய வகைகளான சோளம், கம்பு, மக்காச்சோளம் போன்ற அனைத்து பயிர் வகைகளுக்கும், விதை நேர்த்தி செய்யலாம் என, விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.

இயற்கை விவசாயம் செய்தால் மருத்துவமனைக்குப் போகவேண்டியிருக்காது

இயற்கை விவசாயம் செய்து அதில் இருந்து உற்பத்தியாகும் காய்கறிகளை சாப்பிட்டால் எந்த நோயும் வராமல் இருப்பதுடன், மருத்துவமனைக்கோ அல்லது மருந்துக் கடைகளுக்கோ போக வேண்டிய அவசியம் இருக்காது என இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பேசினார்.

ராமநாதபுரம் அருகே எட்டிவயல் கிராமத்தில் விவசாயி தரணி. முருகேசனின் ஒருங்கிணைந்த பண்ணையில் இயற்கை வேளாண்மை குறித்த 2 நாள் பயிற்சி முகாம் சனிக்கிழமை தொடங்கியது. இதற்கு ஆட்சியர் க. நந்தகுமார் தலைமை வகித்தார். முகாம் தொடக்க விழாவிற்கு வேளாண்மை இணை இயக்குநர் கே. சக்திமோகன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பா. இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) எஸ். சௌந்தர்ராஜன் வரவேற்றார்.

பயிற்சி முகாமில் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பேசியதாவது:

இயற்கை விவசாயம் மூலம் எந்த ஒரு காய்கறியையும் விளைவித்து சாப்பிட்டால் எந்த நோயும் வருவதற்கு வாய்ப்பில்லை. உதாரணமாக இயற்கை விவசாயம் மூலம் முட்டைக்கோஸ் சாகுபடி செய்தால் அதை பொரித்தோ அல்லது சமைத்தோ சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அதன் இலைகளை அப்படியே பறித்து சாப்பிடலாம். பிரண்டை துவையல் செய்து சாப்பிட்டால் சாம்பார், வத்தல் குழம்பு, புளிக்குழம்பு ஆகிய எதையும் வைக்கத் தேவையில்லை. தூதுவளையை ரசம் வைத்து சாப்பிட்டால் சளித் தொந்தரவுகள் இருக்காது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் கம்பு, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி ஆகியவற்றை சாப்பிட்டு நோயின்றி வாழ்ந்தனர். இப்போது ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்தி பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். காரட் சாப்பிட்டால் சத்து நிறைந்தது என்று கூறி பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு அதை அப்படியே சாப்பிடுமாறு சொல்கிறார்கள். அதே நேரத்தில் அது ரசாயனத்தால் செய்யப்பட்டதாக இருந்தால் சத்துக்குப் பதிலாக நோயைத் தான் தரும் என்பதை பலரும் புரிந்து கொள்வதில்லை. நவீன வேளாண்மை மோசமான அனுபவங்களையே நமக்கு கற்றுத் தந்திருக்கிறது.

இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தியாகும் காய்கறிகளை சாப்பிட்டால் மருத்துவமனைக்கோ அல்லது மருந்துக் கடைகளுக்கோ செல்ல வேண்டிய அவசியமே இருக்காது. விவசாயத்தில் ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் இன்று ஏராளமான மருந்துக் கடைகளும், மருத்துவமனைகளும் பெருகி விட்டன.

ஒவ்வொரு ஊரிலும், பள்ளிகளிலும் காலியாகவுள்ள இடங்களில் குறைந்தது 10 மூலிகைச் செடிகளையாவது நட்டு வைத்து அதன் பயன்களைப் பலரும் அறியும்படி செய்ய வேண்டும். இந்தியாவில் மட்டும் 90 ஆயிரம் தாவரங்கள் உள்ளன. அவை அனைத்துமே ஏதேனும் ஒரு நோய்க்கோ அல்லது பல நோய்களுக்கோ மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றார் கோ. நம்மாழ்வார்.

விழாவில் செய்யது அம்மாள் அறக்கட்டளையின் நிர்வாகி செய்யதா, எட்டிவயல் ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பயிற்சி முகாமில் அசோலா, தேனீ, காளான் ஆகியவை வளர்ப்பு, காய்கறி, கீரை சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையின் பயன்கள், புரிந்து கொண்டால் பூச்சிகளும் உங்கள் நண்பர்களே என்பன உள்பட பல்வேறு தலைப்புகளில் வல்லுநர்கள் பலர் பயிற்சி அளித்தனர்.

ஏற்பாடுகளை வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம், விவசாயி தரணி முருகேசன் ஆகியோருடன் வேளாண் துறை அதிகாரிகளும் செய்திருந்தனர்.

தோல் தொழிற்சாலைகளால் பாதிப்படைந்த விவசாயிகளுக்கு இழப்பீடு

தோல் தொழிற்சாலைகளின் கழிவு நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு ஆணையத்தால் நிர்ணயிக்கப்பட்ட இழப்பீட்டுத்தொகை சம்பந்தப்பட்ட வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் வழங்கப்பட்டு வருகிறது. இந்நிலையில், குறிப்பிட்ட முகவரியில் வசிக்காத பயனாளிகளுக்கு இழப்பீட்டுத்தொகை வழங்கமுடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

இழப்பீட்டுத் தொகை பெறவேண்டிய, நிலுவையிலுள்ள பயனாளிகளின் பட்டியல் சம்பந்தப்பட்ட தாலுகா அலுவலகங்களிலும் கிராம சாவடியிலும் உள்ள அறிவிப்புப் பலகையில் ஒட்டப்பட்டுள்ளது.

இழப்பீட்டுத்தொகை பெறாத பயனாளிகள் சம்பந்தப்பட்ட கிராம நிர்வாக அலுவலர் அல்லது தாலுகா அலுவலகங்களை தொடர்புகொண்டு வரும் 26ம் தேதிக்குள் வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மூலம் பெற்றுக்கொள்ளுமாறு மாவட்ட ஆட்சியர் பொ.சங்கர் தெரிவித்துள்ளார்.

விவசாயிகள் சங்க மாநாட்டு ஜோதிக்கு வரவேற்பு
விவசாயிகள் சங்க மாநாட்டு ஜோதி ஞாயிற்றுக்கிழமை தருமபுரி மாவட்டத்துக்கு வந்தது.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் அகில இந்திய விவசாயிகள் சங்கத்தின் 33-ஆவது மாநாடு கடலூரில் வருகிற 24 முதல் 27-ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்த மாநாட்டையொட்டி, மறைந்த தலைவர்களின் நினைவாக தமிழகத்தின் நான்கு முனைகளிலிருந்தும் நினைவு ஜோதி எடுத்து வரப்படுகிறது.

அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வழியாக மாநாட்டு ஜோதியை ஏந்தி வந்த பயணக் குழுவை தருமபுரி மாவட்டம், காரிமங்கலத்தில் எம்எல்ஏ டில்லிபாபு தலைமையில் விவசாயிகள் சங்க மாவட்டத் தலைவர் ஆறுமுகம், செயலாளர் கே.என்.மல்லையன், பொருளாளர் ஏ.குமார், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்டச் செயலாளர் என்.மாரிமுத்து, நிர்வாகி பி.இளம்பரிதி உள்ளிட்டோர் வரவேற்றனர்.

தருமபுரி மாவட்டத்தில் பாப்பாரப்பட்டி, பென்னாகரம், இண்டூர், தருமபுரி, மொரப்பூர், அரூர் வழியாக திருவண்ணாமலை மாவட்டத்துக்கு மாநாட்டு ஜோதி புறப்பட்டது.

"ஆகஸ்ட் முழுவதும் பயிர்க் கடன் முகாம்'
பெரம்பலூர் மாவட்ட வருவாய் கிராமங்களில் ஆகஸ்ட் மாதம் முழுவதும் பயிர்க் கடன் வழங்கும் முகாம் நடைபெற உள்ளது என்றார் மாவட்ட ஆட்சியர் தரேஸ் அஹமது.

பெரம்பலூர் ஆட்சியரகத்தில் விவசாயிகளுக்கு பயிர்க்கடன் முகாம் நடத்துவது தொடர்பாக அண்மையில் நடைபெற்ற ஆலோசனைக் கூட்டத்தில் அவர் மேலும் பேசியது:

விவசாயிகள் வாழ்வில் ஏற்றம் பெற பயிர்க் கடன் வழங்கும் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகிறது. இதன்படி வழங்கப்படும் கடனை முறையாகத் திருப்பிச் செலுத்தும் விவசாயிகளுக்கு வட்டியில்லை என்பது கூடுதல் சிறப்பாகும்.

அந்த வகையில், பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ள அனைத்து விவசாயிகளும் பயிர்க்கடன் வழங்கும் திட்டத்தின் கீழ் பயன் பெற வேண்டும் என்ற நோக்கில் இந்தப் பயிர்க் கடன் முகாம் நடைபெற உள்ளது.

இதில் பயன் பெற விரும்புவோர் அரசுடைமையாக்கப்பட்ட வங்கியில் சேமிப்புக் கணக்கு தொடங்கியிருப்பதோடு, நிலத்தின் சிட்டா அடங்கல் சான்றிதழ்களையும் பெற்றிருக்க வேண்டும்.

விவசாயிகள் வசிக்கும் பகுதிக்குள்பட்ட தொடக்க வேளாண் கூட்டுறவு வங்கியிலிருந்து தடையின்மைச் சான்று பெற்றிருக்க வேண்டும்.

முகாம்களில் வருவாய், வேளாண், தோட்டக்கலை மற்றும் கூட்டுறவு உள்ளிட்ட துறைகளின் அலுவலர்கள் கலந்துகொண்டு, தகுதியான விவசாயிகளுக்கு உடனடியாக பயிர்க்கடன் வழங்க நடவடிக்கை மேற்கொள்வர் என்றார் அவர்.

கூட்டத்தில் வேளாண் இணை இயக்குநர் ப. சங்கரலிங்கம், தனித் துணை ஆட்சியர் இரா. ரேவதி, கூட்டுறவுத் துறை துணைப் பதிவாளர் கண்ணன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்) இரா. கனகசபை, தோட்டக் கலைத் துறை துணை இயக்குநர் (பொ) இந்திரா, வங்கிப் பிரதிநிதிகள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விவசாயிகளுக்கு நிபந்தனையின்றி புதிய கடன்கள் வழங்கக் கோரிக்கை
காவிரி டெல்டா பாசனப் பகுதி  விவசாயிகள் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ளதால், நிபந்தனையின்றி புதிய கடன்களை அரசு வழங்க வேண்டுமென காவிரி கடைமடை பகுதி விவசாயிகள் தமிழக முதல்வருக்கு கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஆண்டு பருவமழை பொய்த்ததாலும், காவிரியில் கர்நாடகம் தண்ணீர் விட மறுத்ததாலும் குறுவை, சம்பா, தாளடி சாகுபடிகள் முழுமையாக பொய்த்து விட்டன.

வறட்சி பாதித்த பகுதிகளை மத்திய அரசின் நிபுணர் குழுவினரும், தமிழக நிதி அமைச்சர் ஓ. பன்னீர்செல்வம் தலைமையிலான 10 அமைச்சர்கள் கொண்ட உயர்நிலைக் குழுவினரும், உச்ச நீதிமன்ற உத்தரவின்பேரில், மத்திய நீர்வளத் துறைச் செயலர் தலைமையிலான குழுவினரும், தமிழகம் முழுவதும் மத்திய அரசின் சார்பில் பார்வையிட்டு, வறட்சியினால் ஏற்பட்ட பாதிப்பின் தன்மையை அறிக்கையாக அளித்துள்ளனர்.

இதன்படி, தமிழக அரசு விவசாயிகளுக்கு பயிர்க் காப்பீட்டுத் தொகையையும் சேர்த்து, ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரம் வீதம்  வழங்கப்படுமென அறிவித்தது. ஆனால், இந்த நிவாரணம் விவசாயிகளுக்கு சதவீத வாரியாக பிரித்து வழங்கப்பட்டதில் அதிகாரிகள் செய்த குளறுபடிகள் காரணமாக, விவசாயிகள் எதிர்பார்த்த முழுமையான நிவாரணத்தைப் பெற இயலவில்லை.

மேலும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடன் பெற்ற  விவசாயிகளுக்கு இன்னும் இந்தத் தொகை வழங்கப்படவில்லை.

கூட்டுறவு வங்கிகளில் கடன்பெற்ற விவசாயிகளின் பயிர்க் காப்பீட்டுத் தொகை வந்த உடன் அரசுக் கணக்கில் செலுத்தும்  வகையில், ஒப்புதல் கடிதம் சம்பந்தப்பட்ட விவசாயிகளிடம் பெறப்பட்டுள்ளது. டெல்டா மாவட்டம் முழுமையும் உள்ள விவசாயிகள் இந்த சலுகையின் முழு பயனையும் பெறவில்லை.

எனவே, அனைத்து விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 25 ஆயிரமும், நிலத்தை தரிசாகப் போட்ட விவசாயிகளுக்கு நிவாரணம் ஏதும் வழங்கப்படாததால், தரிசு நில விவசாயிகளுக்கும் ஏக்கருக்கு ரூ. 15 ஆயிரமும், வேலைவாய்ப்பை இழந்த விவசாயத் தொழிலாளர்களது குடும்பத்தினருக்கு

மாதந்தோறும் ரூ. 10 ஆயிரம் வீதமும் வழங்கப்பட வேண்டுமென அரசுக்கு விவசாயிகள் சார்பில் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வரும் ஆண்டில் சாகுபடியை மேற்கொள்ள அனைத்து விவசாயிகளுக்கும் விதை, உரம், பூச்சிக் கொல்லி மருந்து உள்ளிட்ட அனைத்து விவசாய இடுபொருள்களையும் அரசு இலவசமாக வழங்க வேண்டும்.

ஆண்டுதோறும் மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் ஜூன் மாதத்தில் தண்ணீர் திறக்கப்படுவது வழக்கம். ஆனால், நிகழாண்டு, உரிய நேரத்தில் திறக்கப்படாததால் ஏரி, குளம் போன்ற நீர்நிலைகள் வறண்டு காணப்படுகின்றன.

வருகிற ஆண்டு சாகுபடியை சிறப்பான முறையில் மேற்கொள்ள அரசு நிபந்தனையின்றி பயிர்க் கடன்களை வழங்க வேண்டும் என்பதே விவசாயிகளின் கோரிக்கையாக உள்ளது.

அம்பை விவசாயிகள் வேளாண் சுற்றுலா
அம்பாசமுத்திரம் வட்டாரத்தில் உள்ள விவசாயிகள் வேளாண் சார்ந்த சுற்றுலாச் சென்று வந்தனர்.

வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில் அம்பாசமுத்திரம் வட்டாரத்தைச் சேர்ந்த 50 விவசாயிகள் அருப்புக்கோட்டை, கோவில்பட்டிக்கு வேளாண் தொடர்பான சுற்றுலா சென்று வந்தனர். அம்பாசமுத்திரம் வேளாண் உதவி இயக்குநர் சை. சுந்தரம், அட்மா மேலாளர் சுஜித் தலைமையில் விவசாயிகள் சுற்றுலா மேற்கொண்டனர். அங்குள்ள வேளாண் கருவிகளை பார்வையிட்டனர்.

இயற்கை விவசாயம் செய்தால் மருத்துவமனைக்குப் போகவேண்டியிருக்காது
இயற்கை விவசாயம் செய்து அதில் இருந்து உற்பத்தியாகும் காய்கறிகளை சாப்பிட்டால் எந்த நோயும் வராமல் இருப்பதுடன், மருத்துவமனைக்கோ அல்லது மருந்துக் கடைகளுக்கோ போக வேண்டிய அவசியம் இருக்காது என இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பேசினார்.

ராமநாதபுரம் அருகே எட்டிவயல் கிராமத்தில் விவசாயி தரணி. முருகேசனின் ஒருங்கிணைந்த பண்ணையில் இயற்கை வேளாண்மை குறித்த 2 நாள் பயிற்சி முகாம் சனிக்கிழமை தொடங்கியது. இதற்கு ஆட்சியர் க. நந்தகுமார் தலைமை வகித்தார். முகாம் தொடக்க விழாவிற்கு வேளாண்மை இணை இயக்குநர் கே. சக்திமோகன், தோட்டக்கலைத் துறை துணை இயக்குநர் பா. இளங்கோவன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (வேளாண்மை) எஸ். செளந்தர்ராஜன் வரவேற்றார்.

பயிற்சி முகாமில் இயற்கை வேளாண் விஞ்ஞானி கோ. நம்மாழ்வார் பேசியதாவது:

இயற்கை விவசாயம் மூலம் எந்த ஒரு காய்கறியையும் விளைவித்து சாப்பிட்டால் எந்த நோயும் வருவதற்கு வாய்ப்பில்லை. உதாரணமாக இயற்கை விவசாயம் மூலம் முட்டைக்கோஸ் சாகுபடி செய்தால் அதை பொரித்தோ அல்லது சமைத்தோ சாப்பிட வேண்டிய அவசியம் இல்லை. அதன்

இலைகளை அப்படியே பறித்து சாப்பிடலாம். பிரண்டை துவையல் செய்து சாப்பிட்டால் சாம்பார், வத்தல் குழம்பு, புளிக்குழம்பு ஆகிய எதையும் வைக்கத் தேவையில்லை. தூதுவளையை ரசம் வைத்து சாப்பிட்டால் சளித் தொந்தரவுகள் இருக்காது.

கடந்த 20 ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்தவர்கள் கம்பு, கேழ்வரகு, சாமை, குதிரைவாலி ஆகியவற்றை சாப்பிட்டு நோயின்றி வாழ்ந்தனர். இப்போது ரசாயன உரங்களை அதிகம் பயன்படுத்தி பல்வேறு நோய்களுக்கு ஆளாகின்றனர். காரட் சாப்பிட்டால் சத்து நிறைந்தது என்று கூறி பெண்கள் தங்கள் குழந்தைகளுக்கு அதை அப்படியே சாப்பிடுமாறு சொல்கிறார்கள். அதே நேரத்தில் அது ரசாயனத்தால் செய்யப்பட்டதாக இருந்தால் சத்துக்குப் பதிலாக நோயைத் தான் தரும் என்பதை பலரும் புரிந்து கொள்வதில்லை. நவீன வேளாண்மை மோசமான அனுபவங்களையே நமக்கு கற்றுத் தந்திருக்கிறது.

இயற்கை விவசாயம் மூலம் உற்பத்தியாகும் காய்கறிகளை சாப்பிட்டால் மருத்துவமனைக்கோ அல்லது மருந்துக் கடைகளுக்கோ செல்ல வேண்டிய அவசியமே இருக்காது. விவசாயத்தில் ரசாயன உரங்களை பயன்படுத்துவதால் இன்று ஏராளமான மருந்துக் கடைகளும், மருத்துவமனைகளும் பெருகி விட்டன.

ஒவ்வொரு ஊரிலும், பள்ளிகளிலும் காலியாகவுள்ள இடங்களில் குறைந்தது 10 மூலிகைச் செடிகளையாவது நட்டு வைத்து அதன் பயன்களைப் பலரும் அறியும்படி செய்ய வேண்டும். இந்தியாவில் மட்டும் 90 ஆயிரம் தாவரங்கள் உள்ளன. அவை அனைத்துமே ஏதேனும் ஒரு நோய்க்கோ அல்லது பல நோய்களுக்கோ மருந்தாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது என்றார் கோ. நம்மாழ்வார்.

விழாவில் செய்யது அம்மாள் அறக்கட்டளையின் நிர்வாகி செய்யதா, எட்டிவயல் ஊராட்சி மன்றத் தலைவர் சந்திரன் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

பயிற்சி முகாமில் அசோலா, தேனீ, காளான் ஆகியவை வளர்ப்பு, காய்கறி, கீரை சாகுபடி, ஒருங்கிணைந்த பண்ணையின் பயன்கள், புரிந்து கொண்டால் பூச்சிகளும் உங்கள் நண்பர்களே என்பன உள்பட பல்வேறு தலைப்புகளில் வல்லுநர்கள் பலர் பயிற்சி அளித்தனர்.

ஏற்பாடுகளை வேளாண் தொழில்நுட்ப வல்லுநர் ஏகாம்பரம், விவசாயி தரணி முருகேசன் ஆகியோருடன் வேளாண் துறை அதிகாரிகளும் செய்திருந்தனர்.

தில்−யில் காய்கறிகள் விலை திடீர் உயர்வு
தில்லியில் சில வாரங்களாக காய்கறிகளின் விலை வழக்கத்தை விட அதிகமாக உயர்ந்து வருகிறது. சில காய்கறிகளின் விலை 40 முதல் 100 சதவீதம் வரை உயர்ந்துள்ளது.

பருவ மழை பெய்யும் சில நாள்களுக்கு முன்பாகவே சில வியாபாரிகள் காய்கறிகளை மொத்தமாக வாங்கி குளிர்பதனக் கிடங்குகளில் பதுக்கி வைத்து செயற்கை பற்றாக்குறையை ஏற்படுத்தி, மழை பெய்யத் தொடங்கியவுடன் அதிக விலைக்கு அவற்றை விற்பதே விலையேற்றத்துக்கு முக்கிய காரணமாகக் கூறப்படுகிறது.

இந்த விலையேற்றம் தங்களை மிகவும் பாதித்துள்ளதாக நடுத்தர, ஏழை மற்றும் வறிய மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர்.

இது குறித்து தில்லி உணவு மற்றும் வழங்கல் துறை அமைச்சர் ஹாருண் யூசப்பிடம் கேட்ட போது, "காய்கறி மற்றும் பழங்கள் மொத்த வியாபாரிகள் சங்கப் பிரதிநிதிகளுடன் வெள்ளிக்கிழமை ஆலோசனை நடத்தினேன்.

அதில் வெங்காயமும், காய்கறிகளும் இருப்பில் உள்ளதாகவும், சில்லறை வியாபாரிகள்தான் காய்கறிகள் விலையை உயர்த்துவதாகவும் தெரிய வந்தது. காய்கறிகளை அதிக விலைக்கு விற்போர் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார்.

ஆனால் அமைச்சரின் எச்சரிக்கை, காய்கறி மொத்த விற்பனைச் சந்தைகளில் ஒன்றான காஜிபூர் மண்டியில் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தவில்லை.

வழக்கமாக, அங்கு கிலோ ரூ. 20-30 வரை விற்கப்படும் தக்காளி, தற்போது ரூ. 40-50 வரை விற்கப்படுகிறது.

காஜிபூரில் காய்கறி மொத்த விற்பனையாளர் தினேஷ் சர்மா கூறுகையில், "ஜுலை முதல் அக்டோபர் வரை காய்கறி விலை அதிகரிப்பதும், குறைவதும் வழக்கமானதுதான்.

எங்கள் மண்டிக்கு காற்கறி வரத்து அதிகரிக்கும்போது தில்லியில் பிற பகுதிகளில் உள்ள சிறிய சந்தைகளில் காய்கறி விலை குறைவதும், இங்கு காய்கறி வரத்து குறையும்போது, விலைகள் அதிகரிப்பதும் வாடிக்கை' என்றார்.

காஜிபூர் மண்டியில் காய்கறி வாங்குவதற்காக காஜியாபாதின் வைஷாலியில் இருந்து வந்திருந்த சேகர் ராய் கூறுகையில், "சில்லறைச் சந்தைகளில் கிடைக்கும் காய்கறிகளைவிட இங்கு காய்கறிகள் மலிவாகக் கிடைக்கும் என்று வருகிறேன். ஆனால், இங்கும் விலை கடுமையாக உள்ளது' என்றார்.

காஜிபூர், ஆசாத்பூர் காய்கறி மண்டிக்கு விற்பனைக்கு வரும் காய்கறிகள் பெரும்பாலும் அண்டை மாநிலங்களான உத்தரகண்ட், உத்தர பிரதேதம், ராஜஸ்தான், பஞ்சாப், மத்திய பிரதேசம், பிகார் உள்ளிட்ட மாநிலங்களிலிருந்து வருகின்றன.

இந்த முறை மத்திய பிரதேசத்தில் இருந்து தக்காளியும், பிகாரிலிருந்து வாழைக்காயும் அதிக அளவில் வந்துள்ளன.

விலையேற்றத்துக்கு சில்லறை வியாபாரிகள்தான் கூறப்படுவதை பல வியாபாரிகள் மறுத்தனர். "எங்கள் மண்டியில் காய்கறிகளை பதுக்கவில்லை.

வெங்காயம், உருளைக்கிழங்கு உள்ளிட்ட சில காய்கறிகளின் விலையில் ஏற்ற, இறக்கம் உள்ளது. 15 நாள்களில், வெங்காயம் மற்றும் காய்கறிகளின் விலை சரியும்' என்றனர் காஜிபூர் மண்டி சில்லறை வியாபாரிகள் பலர்.

வட மாநிலங்களில் தொடர்ந்து பெய்துவரும் மழை, உத்தரகண்ட் வெள்ளம் போன்ற காரணங்களால் காய்கறி விலை அதிகரித்துள்ளதாக கூறப்பட்டாலும், அதைப் பயன்படுத்தி கொள்ளை லாபம் பெற சில கும்பல் முயற்சித்து வருவதை வியாபாரிகள் தரப்பு நிராகரிக்கவில்லை.

அதைத் தடுக்க, காய்கறி விற்பனையை தில்லி அரசு கண்காணிக்க வேண்டும். இல்லாவிட்டால் இப்பிரச்னை பூதாகரமாக வெடிக்கும் என்று எச்சரிக்கின்றனர் பல சமூக ஆர்வலர்கள்.

அரசு மீது புகார்: இதனிடையே, காய்கறி விலை உயர்ந்து வருவது மக்களை கவலை கொள்ளச் செய்கிறது. இதற்கு ஆளும் காங்கிரஸ் அரசின் அலட்சியமே காரணம் என்று சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் விஜய் குமார் மல்ஹோத்ரா குற்றம்சாட்டியுள்ளார்.